**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.581/2022 இ.ம.எண்.
எஸ்.சி.ஒ.பி.எண். நி.வே.ம.எண்.

2023 ம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.1**-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.ஜானகி, பலகை எழுத்தர் என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரேம்குமார் | ஜாதி | : | |
| த/பெ | : | | மதம் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | தொழில் | : | |
| மாவட்டம் | : | | வயது | : | |

**முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கின் வாதி வங்கியின் அதிகாரம் பெற்ற முகவர் ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். 15.10.2018 ம் தேதியிட்ட பிரதிவாதிகளால் எங்களது வங்கிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட கடன் வேண்டுதல் விண்ணப்பம் மற்றும் ஒப்பந்தம் அசல் **வா.சா.ஆ.1**. 26.11.2018 ம் தேதியிட்ட கடன் வழங்கப்பட்டதற்கான கடிதம் அசல் **வா.சா.ஆ.2**. 06.11.2021 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.3**. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு 1 ம் பிரதிவாதிக்கு சார்வாகாமல் திருப்பப்பட்டதற்கான தபால் உறை அசல் **வா.சா.ஆ.4.** மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை 2 ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.5**. 31.07.2021 ம் தேதி வரையிலான பிரதிவாதிகளின் பெயரிலான வங்கி கடன் கணக்கு விவரப்பட்டியலின் உண்மை நகல் **வா.சா.ஆ.6**. எனது பெயருக்கு வழங்கப்பட்ட பொது அதிகாரப் பத்திரத்தின் உண்மை நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.